# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

தொலைபேசி எண்: 2363 5011 நிகரி: 2363 8282, 2363 8283

மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 14/2021 நாள்: 16.09.2021

**ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள் - வேட்பாளர்கள் குறித்த தகவல்கள் - தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய இணைய தளத்தில் வெளியீடு**

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிபேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல் அறிவிக்கைகளையும், ஏனைய 28 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக உள்ள பதவியிடங்களுக்கான தற்செயல் தேர்தல் அறிவிக்கைகளையும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டதைத் தொடர்ந்து, மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், கிராம ஊராட்சி தலைவர் மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் ஆகிய பதவியிடங்களுக்கு 15.09.2021 முதல் வேட்புமனுக்கள் பெறப்பட்டு வருகின்றன.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மேல்முறையீட்டு மனு எண். 1268/2016 மற்றும் நீதிப்பேராணை மனுக்கள் 14381 மற்றும் 18141/2017-ல் 04.09.2017 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கலின்போது அளித்த உறுதிமொழி ஆவணத்தின் சாற்றுரையின் (படிவம் 3-A) சுருக்கம் இவ்வாணைய இணையதள முகவரி https://tnsec.tn.nic.in-ல் வெளியிடப்படுகிறது.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

16/9/2021

மக்கள் தொடர்பு அலுவலர்